

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 73 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 07 – வெள்ளிக்கிழமை 24 அக்டோபர் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 73 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 07 - Friday 24 October 2025 - Dak 12 Pages ₹ 5.00


## அடுத்த 5 நாட்களுக்கு கனமழை எச்சரிக்கை!

சென்னை, அக். 24-

தமிழகத்தில் அக்டோபர் 28 வரை அடுத்த 5 நாட்களுக்கு பல்வேறு மாவட்டங்களில் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில்



தமிழக கடலோரப் பகுதிகளுக்கிடையே நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில் வட தமிழக, புதுவை, தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளைக் கடந்து நகர்ந்து செல்லக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல, தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி புதனன்று காலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் நகரக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால், தமிழகத்தில் பல இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.


## சென்னையில் கனமழை: மழைநீர் துரிதமாக வெளியேற்றம்! சீரான போக்குவரத்து!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் போர்க்கால நடவடிக்கை!

## குடிநீர்வசதி, மரங்கள் அகற்றல் - மீட்புப் பணிகள் தீவிரம்!

**சென்னை, அக். 24-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி சென்னை மாநகரில் 22 சுரங்கப்பாதைகளில் மழைநீர் அகற்றப்பட்டு போக்குவரத்து சீரானது. 1,436 மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டு தாழ்வான பகுதியில் மழைநீர் தேங்காமல் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிற மாவட்டங்களிலிருந்து 299 தூர்வாரும் இயந்திரங்கள், 73 கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், 298 ஜெட்ராடிங் வாகனங்கள் தயார் நிலையில் உள்ளன.3 இலட்சத்து 97 ஆயிரத்து 900 பேருக்கு நேற்று முன்தினம் முதல் நேற்று காலை வரை உணவு வழங்கப்பட்டது !**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி, சென்னை மாநகரில் 22 சுரங்கப் பாதைகளில் தேங்கிய மழைநீர் போர்க்கால அடிப்படையில் அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சீரான போக்குவரத்து பராமரிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (22.10.2025) காலை காலை 8.30 மணி முதல் இரவு 9 மணி வரை சராசரியாக 4.66 மி.மீட்டர் மழை பெய்துள்ளது அதிகபட்சமாக மேடவாக்கம் சந்திப்பில் 18.30 மி.மீ. மழைப்பொழிவும் (பெருங்குடி மண்டலம்), குறைந்தபட்சமாக திருவொற்றியூரில் 0.30 மி.மீட்டர் மழையும் பெய்துள்ளது.

### 3.96,400 பேருக்கு உணவு!

தாழ்வான பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு உணவு வழங்கும். வகையில் நேற்று முன்தினம் (22.10.2025) 68 சமையல் கூடங்கள் மூலமாக உணவு தயாரிக்கப்பட்டு, 1,48,450 பேருக்கு காலை உணவும், 76 சமையல் கூடங்கள் மூலமாக உணவு தயாரிக்கப்பட்டு 2,20,950 பேருக்கு மதிய உணவும், 15 சமையல் கூடங்கள் மூலமாக உணவு தயாரிக்கப்பட்டு 27,000 பேருக்கு இரவு உணவும், என மொத்தம் 3,96,400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

### குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது!

சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் 454 குடிநீர் வாகனங்கள் வாயிலாக சராசரியாக 3,500 நடைகள் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள 106 சமையல் கூடங்கள் மற்றும் 215 வெள்ள நிவாரண மையங்களுக்கு சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் தேவையான குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகளும், 150 எண்ணிக்கையில் 100Hp மோட்டார் பம்புகளும், டிராக்டர் மேல் 500 மோட்டார் பம்புகளும் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீர் அகற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

### 24 மரங்கள் உடனடியாக அகற்றல்!

17.10.2025 முதல் 22.10.2025 வரை மழையின் காரணமாக விழுந்த 24 மரங்களும் உடனடியாக அகற்றப் பட்டுள்ளன.

> **“தாழ்வான பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு உணவு வழங்கும் வகையில் நேற்று முன்தினம் (22.10.2025) 68 சமையல் கூடங்கள் மூலமாக உணவு தயாரிக்கப்பட்டு, 1,48,450 பேருக்கு காலை உணவும், 76 சமையல் கூடங்கள் மூலமாக உணவு தயாரிக்கப்பட்டு 2,20,950 பேருக்கு மதிய உணவும், 15 சமையல் கூடங்கள் மூலமாக உணவு தயாரிக்கப்பட்டு 27,000 பேருக்கு இரவு உணவும் என மொத்தம் 3,96,400 பேருக்கு உணவு வழங்கப் பட்டுள்ளது.”**

பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களை 1913 என்ற எண்ணிற்கும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பான புகார்களை 1916 என்ற உதவி எண்ணிற்கும் கட்டணமில்லாமல் 24 மணி நேரமும் தெரிவித்து தேவையான உதவிகளை பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## அக்.29 - அன்று தென்காசியில் அரசு நல உதவிகள் வழங்கும் விழா!

# அக். 30 - அன்று பசும்பொன் தேவர் ஜெயந்தி விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

தென்காசி, அக்.24-

தென்காசிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கடந்த 25ம் தேதி செல்வதாக இருந்தது. ஆனால் கனமழை காரணமாக நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்ட நிலையில் வரும் 29ம் தேதி முதல்வர் தென்காசி செல்ல உள்ளதாக உறுதி செய்யப் பட்டுள்ளது. அன்று அரசு சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்குகிறார்.

29ம் தேதி காலை சென்னையில் இருந்து புறப்பட்டு 10.30 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையம் செல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கிருந்து சாலை மார்க்கமாக தென்காசி செல்கிறார். வழியில் 11.30 மணிக்கு ஆலங்குளத்தில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்படுகிறது. மாலை 4 மணிக்கு நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்குகிறார்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு சாலை மார்க்கமாக ராஜபாளையம் வழியாக மதுரை சென்று இரவு அங்கு தங்குகிறார். மறுநாள் 30ம் தேதி அங்கிருந்து புறப்பட்டு ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெறும் தேவர் ஜெயந்தி விழாவில் கலந்துகொண்டு தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

# 8.82 லட்சம் மனுக்கள் நிலுவை : உச்சநீதிமன்றம் அதிருப்தி!

*புதுடெல்லி, அக்.24-*

நீதிமன்றங்கள் பல வழக்குகளில் வெளியிடப்பட்ட உத்தரவுகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. அந்த உத்தரவுகளை நிறைவேற்ற வலியுறுத்தி மீண்டும் நாடு முழுவதும் நீதிமன்றங்களில் சுமார் 8.82 லட்சத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டு அவையும் நிலுவையில் உள்ளன. இதனை குறிப்பிட்ட உச்ச நீதிமன்ற அமர்வு தனது அதிருப்தியை தெரிவித்துள்ளது.



உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, பங்கஜ் மித்தல் ஆகியோர் அடங்கிய அமர்வு அண்மையில் கூறியதாவது:-

உரிமையியல் சச்சரவுகளில் நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றக் கோரி, நாட்டில் உள்ள பல்வேறு நீதி மன்றங்களில் 8.82 லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் நிலுவையில் உள்ளன. இது மிகுந்த ஏமாற்றம் அளிப்பதுடன், அபாயகரமாகவும் உள்ளது. ஓர் உத்தரவை பிறப்பித்த பின் அதை நிறைவேற்ற பல ஆண்டுகளாகும் என்றால், அந்த உத்தரவால் எந்த அர்த்தமும் இல்லை.

மேலும் இது நீதி பரிபாலனத்தை ஏளனம் செய்வதற்குச் சமமான விஷயம். எனவே நிலுவையில் உள்ள அந்த மனுக்கள் மீதான விசாரணையை திறம்படவும், விரைந்தும் நிறைவு செய்ய நடைமுறையை உருவாக்கி, மாவட்ட நீதித் துறைக்கு அனைத்து உயர் நீதிமன்றங்களும் வழி காட்ட வேண்டும் என்று அந்த அமர்வு கேட்டுக் கொண்டுள்ளது.

## முத்தமிழறிஞர் கலைஞர் மீதும் – என் மீதும் பேரன்பு கொண்டு செயலாற்றியவர்!

# பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவர்!

## சேந்தமங்கலம் தொகுதி கழக எம்.எல்.ஏ., கு.பொன்னுசாமி மறைவுக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, அக். 24 -**

**சேந்தமங்கலம் தொகுதியின் கழக சட்டமன்ற உறுப்பினர் கு. பொன்னுசாமி அவர்கள் மறைவெய்தியதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் “சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி - முத்தமிழறிஞர் கலைஞர் மீதும் என் மீதும் பேரன்பு கொண்டு செயலாற்றியவர்!” என்றும், “பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவர்!” என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சேந்தமங்கலம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் கு.பொன்னுசாமி அவர்கள் மறைந்த துயரச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.



சேந்தமங்கலம் தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்று இரண்டு முறை அவர்களது பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் மக்கள் பணி ஆற்றிய அவரது மறைவு அத்தொகுதி மக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பேரிழப்பாகும்.

கழகத்தின் மீது தீவிரப் பற்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் என் மீதும் பேரன்பும் கொண்டு செயலாற்றி வந்த அவர், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளராகக் கழகத்தை வளர்த்ததோடு, பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவர்.

அவரது மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் சேந்தமங்கலம் தொகுதி மக்கள், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், பொது வாழ்வில் அவருக்குத் துணை நின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.